


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் ஜனவரி 22 * 2026 * மலர் -1 * இதழ்-233* VOL-1 * ISSUE-233 விலை ரூ.3 * பக்கம் -4

# வைத்திலிங்கம் தி.மு.க. வில் சேர்ந்தார்!



சென்னை, ஜன. 22–

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வத்தின் முக்கிய ஆதரவாளராக இருந்து வந்த வைத்தியலிங்கம் நேற்று தி.மு.க.வில் சேர்ந்தார். அவர் எம்.எல்.ஏ. பதவியையும் ராஜினாமா செய்தார். மனோஜ் பாண்டியனை அடுத்து வைத்தியலிங்கமும் தி.மு.க.வில் சேர்ந்துள்ளதால் ஓ. பன்னீர்செல்வத்தின் அணி நிலைகுலைந்து விட்டது.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வைத்தியலிங்கம், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் அமைச்சரவையில் நால்வர் அணியில் ஒருவராக அதிகாரம் மிக்கவராக டெல்டா அ.தி.மு.க. வில் வலம் வந்தவர்.

சோழமண்டலத் தளபதி என்றே இவரை அ.தி.மு.க. வினர் அழைத்தனர். ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராகத் தொடர்ந்தார். பின்னர் டி.டி.வி.தினகரன் தரப்புக்கும், எடப்பாடி பழனிசாமி தரப்புக்கும் ஏற்பட்ட மோதல் காரணமாக தினகரன் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

இதையடுத்து அ.தி.மு.க.வில் இரட்டைத் தலைமை உருவானது. தினகரன் தரப்பு, எம்.எல்.ஏக்களை தங்கள் பக்கம் இழுத்தது. அப்போது வைத்தியலிங்கம் தன் ஆதரவு எம்.எல்.ஏ.க்களான வெல்லமண்டி நடராஜன் உட்பட பத்துக்கு மேற்பட்டவர்களை தினகரன் பக்கம் செல்லவிடாமல் தடுத்து எடப்பாடி பழனிசாமியின் ஆட்சிக்கு எந்தச் சிக்கலும் வராமல் காவல் அரணாக இருந்தார்.

சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து தி.மு.க. ஆட்சி அமைந்தது. அ.தி.மு.க. விற்குள் ஒற்றைத் தலைமை விவகாரம் வெடித்தது. ஒருங்கிணைப்பாளராக இருந்த ஓ.பன்னீர்செல்வம், துணை ஒருங்கிணைப்பாளராக இருந்த வைத்தியலிங்கம் உள்ளிட்டோர் எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளர் ஆவதைக் கடுமையாக எதிர்த்த நிலையில், பொதுச்செயலாளர் ஆனார் எடப்பாடி பழனிசாமி.

ஓபன்னீர்செல்வம், வைத்தியலிங்கம், மனோஜ் பாண்டியன் உள்ளிட்டோர் அதிமுகவிலிருந்து வெளியேறி தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவைத் தொடங்கி, கட்சியை நிர்வகிக்க இரட்டை தலைமை வேண்டும் என்றும், கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை ஒருங்கிணைத்து கட்சியில் சேர்க்க வேண்டும் எனவும் கூறி வந்தனர். எடப்பாடி பழனிசாமியைக் கடுமையாக விமர்சித்து வந்த வைத்தியலிங்கம் தொடர்ந்து அ.தி.மு.க. ஒருங்கிணைய வேண்டும் எனவலியுறுத்தினார். இந்நிலையில் மருத்துவ சிகிச்சை காரணமாக கடந்த 2 மாதங்களாக வைத்தியலிங்கம் வெளியில் தலைகாட்டுவதைக் குறைத்துக் கொண்டார். சமீபத்தில், நடைபெற்ற அ.தி.மு.க. உரிமை மீட்புக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் உரிமை மீட்புக் குழு, உரிமை மீட்புக் கழகம் என மாற்றப்பட்டது.

அதில் ஒருங்கிணைப்பு கருத்தை முன் வைத்த வைத்த வைத்தியலிங்கம் எடப்பாடி பழனிசாமியைக் கடுமையாகச் சாடினார்.

இந்தச் சூழலில் சென்னையில் இருந்த வைத்தியலிங்கம் பொங்கல் பண்டிக்கைக்கு தஞ்சாவூர் வந்தார். பொங்கல் அன்று சொந்த ஊரான தெலுங்கன்குடிக்காட்டில் இருந்தவரை தி.மு.க. நிர்வாகிகள் சிலர் சந்தித்து பொங்கல் வாழ்த்து சொன்னார்கள். இதுஅரசியல்வட்டாரத்தில் பரவி பரபரப்பை உச்சப்படுத்தியது. வைத்தியலிங்கம் தி.மு.க.வில் இணையப் போகிறார் என்கிற தகவல் காட்டுத்தீயாகப் பரவியது.

வைத்தியலிங்கத்தின் சொந்த ஊரான தெலுங்கன்குடிகாட்டைச் சேர்ந்தவர் தான் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் மாமனார் கைலாசம். வைத்தியலிங்கமும் மறைந்த கைலாசமும் நெருங்கிய உறவினர்கள் ஆவர்.

இப்பின்னணியில் தான் வைத்தியலிங்கத்தை தி.மு.க.வுக்குள் கொண்டு வரும் பணியை அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் மு.க.ஸ்டாலின் ஒப்படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், இன்று காலை தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் அப்பாவுவிடம் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வதாக வைத்தியலிங்கம் கடிதம் அளித்தார்.

இதைத்தொடர்ந்து, தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம் சென்று முதலமைச்சர்ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்.

முன்னதாக, ஓ.பி.எஸ். ஆதரவு எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு தி.மு.க.வில் இணைந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் பலர் தி.மு.க.வில் விரைவில் இணைவார்கள் என கடைசியாகக் கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.



தலைமை செயலகத்தில் தமிழக சட்டப்பேரவை தலைவரும் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினருமான அப்பாவுவை சென்னை மாவட்ட நிருபர் ஸ்ரீனிவாசன், நெல்லை நிருபர் மோகன்ராஜ் ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்து உள்ளாட்சி அரசு நாளிதழை வழங்கினர்

## தி.மு.க.வில் இணைந்தது ஏன்? வைத்திலிங்கம் விளக்கம் !!



சென்னை, ஜன.22

தி.மு.க.வில் இணைந்த பிறகு முன்னாள் அமைச்சர் வைத்தி லிங்கம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக செயல்படுவது உகந்ததாக இல்லை. நேற்று தமிழ்நாடு முதல் வரை தமிழக மக்கள் போற்றுகிறார்கள். எல்லாருடைய தேவைகளையும் பூர்த்தி செய்து மக்கள் மனதில் உள்ளார் ஸ்டாலின்.

அதனால் அண்ணா தொடங்கிய தாய்கழகத்தில் இணைந்துள்ளேன். அதிமுக சுதந்திரமாக செயல்படவில்லை. சர்வாதிகாரமாக செயல்படுகிறது. கூட்டணி தொடர்பான முடிவில் ஓபிஎஸ் தாமதம் செய்ததால் திமுகவில் இணைந்துள்ளேன். அதிமுகவில் சேருமாறு தனிப்பட்ட முறையில் அழைப்பு வந்தது ஆனால் தனியாக இணைய விரும்பவில்லை. பிரிந்தவர்கள் ஒன்றாக சேர வேண்டும் என்ற நோக்கில் நான் அதிமுகவிற்கு செல்லவில்லை" இவ்வாறு அவர் கூறினார்.



குடியரசு தினத்தை முன்னிட்டு கோவை பி.ஆர்.எஸ் மைதானத்தில் நேற்று காலை மாநகர போலீசாரின் அணிவகுப்பு ஒத்திகை நடந்தது.



கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஓசூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் செயல்விளக்க பணிக்காக கலெக்டர் தினேஷ்குமார் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் அனுப்பி வைக்கப்பட்டது.

### ஜெட் வேகத்தில் புதிய உச்சம்:

## ரூ.2,800 அதிகரித்து ஒரு சவரன் தங்கம் ரூ.1 லட்சத்து 14 ஆயிரத்திற்கு விற்பனை!

### ஒரு கிராம் வெள்ளி ரூ.340 உயர்வு!!

சென்னை,ஜன.22–

தங்கம் விலை கடந்த மாதம் 15ந்தேதி ஒரு சவரன் ரூ.1 லட்சத்தை தாண்டியது. அதன் பின்னர் விலை குறைந்த நிலையில், அதே மாதம் 22ந்தேதியில் இருந்து மீண்டும் ஏறுமுகத்தில் பயணித்தது. கடந்த மாதம் 28ந்தேதி புதிய உச்சத்தை தொட்டு, பிறகு விறுவிறுவென இறங்கியது. அப்படியாக விலை குறைந்து வந்து, கடந்த ஒரு வாரமாக மீண்டும் ஏற்றத்திலேயே தங்கம் விலை இருந்து வருகிறது.

அந்த வரிசையில் நேற்றும் விலை உயர்ந்து இருந்தது. தங்கம் விலையை பொறுத்தவரையில், நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 450க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 7 ஆயிரத்து 600க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்று கிராமுக்கு ரூ.160ம், சவரனுக்கு ரூ.1,280ம் உயர்ந்திருந்தது. பிற்பகலில் மேலும் கிராமுக்கு ரூ.290ம், சவரனுக்கு ரூ.2,320ம் அதிகரித்தது. ஆக நேற்று ஒரே நாளில் மட்டும் கிராமுக்கு ரூ.450ம், சவரனுக்கு ரூ.3,600ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 900க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 11 ஆயிரத்து 200க்கும் விற்கப்பட்டது. இதன் மூலம் தங்கம் இதுவரை இல்லாத வரலாறு காணாத உச்சத்தை எட்டி இருந்தது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் தங்கம் விலை கிராமுக்கு ரூ.730ம், சவரனுக்கு ரூ.5,840ம் அதிகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தங்கம் விலை போலவே வெள்ளி விலையும் தினமும் தாறுமாறாக அதிகரிக்கிறது. நேற்று காலையில் கிராமுக்கு ரூ.12ம், கிலோவுக்கு ரூ.12 ஆயிரமும், பிற்பகலில் கிராமுக்கு ரூ.10ம், கிலோவுக்கு ரூ.10 ஆயிரமும் என ஒரே நாளில் கிராமுக்கு ரூ.22ம், கிலோவுக்கு ரூ.22 ஆயிரமும் எகிறி, ஒரு கிராம் ரூ.340க்கும், ஒரு கிலோ ரூ.3 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது.

வெள்ளி விலை இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு கிலோ ரூ.3.5 லட்சத்தை தாண்டிவிடும் என கணிக்கப்பட்டு வந்த நிலையில்,அதுஇந்தமாதம்இறுதிக்குள்ளாகவே அந்த நிலையை எட்டிவிடும் என்றே சொல்லப்படுகிறது.

இந்நிலையில் இன்று தங்கம் விலை புதிய உச்சத்தை தொட்டுள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,800 அதிகரித்து, ஒரு சவரன் ரூ.1,14,000க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.350 அதிகரித்து. ஒரு கிராம் ரூ.14,250க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் விலை மாற்றமின்றி நேற்றைய விலையிலேயே விற்பனை செய்யப்படுகிறது. இதன்படி ஒரு கிலோ வெள்ளி ரூ.3,40,000க்கும், கிராமுக்கு ரூ.8அதிகரித்து. ஒரு கிராம் ரூ.340க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### குமுளி — கூடலூர் அருகே

## சுற்றுலா வேன் தீப்பிடித்து எரிந்தது!

### 13 பேர் அதிர்ஷ்டவசமாக தப்பினர்!!

கூடலூர், ஜன. 22–

மதுரையிலிருந்து தேக்கடிக்கு 8 ஆண்கள் மற்றும் 4 பெண்கள் என 12 சுற்றுலாப் பயணிகளுடன் வந்த டெம்போ டிராவலர் வேன், நேற்று மதியம் ஒரு மணி அளவில் லோயர் கேம்ப் குமுளி மலைச்சாலையில் பழைய செக்போஸ்ட் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது வாகனத்தின் முன்பகுதியில் இருந்து திடீரென புகை கிளம்புவதை கவனித்த, மதுரையைச் சேர்ந்த



டிரைவர் காதர்பாஷா (26), உடனடியாக வாகனத்தை சாலையோரம் நிறுத்தினார்.

வண்டியிலிருந்து புகை வருவதைக்கண்டதும் சுற்றுலா பயணிகளும், டிரைவரும் உடனடியாக கீழே இறங்கி ஓடியதால், பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. பயணிகள் கீழே இறங்கிய சில நிமிடங்களிலேயே தீ வேன் முழுவதும் பரவி, வாகனம் முழுமையாக எரிந்து சாம்பலானது.

தகவலறிந்து கம்பத்திலிருந்து வந்த தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். மின் கசிவு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்தால் எல்லைப் பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. லோயர் கேம்ப் இன்ஸ்பெக்டர் சூர்யாதிலகராணி தலைமையில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டு, போக்குவரத்தை சீர்செய்தனர்.

லோயர் கேம்ப் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், மாட்லாம்பட்டியில் தமிழ்நாடு அரசின் "உங்க கனவ சொல்லுங்க " என்ற திட்ட விண்ணப்ப படிவத்தினை தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று குடும்பத் தலைவர், உறுப்பினரிடம் வழங்கப்படுவதையும் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை மீண்டும் பெறப்படுவதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் காரிமங்கலம் வட்டாட்சியர் மனோகரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.

## தருமபுரியில் சத்துணவு ஊழியர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் மற்றும் மறியல் போராட்டம்; 300 பேர் கைது!



தருமபுரி, ஜன.22

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 5 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தினர் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போராட்டத்திற்க்கு மாவட்ட தலைவர் தேவகி தலைமை வகித்து ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார்.

சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் அனைத்து வகையான பணியாளர்களுக்கும் நிரந்தர காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

காலியாக உள்ள காலி பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரந்தர அரசு பணியிடங்களாக நிரப்ப வேண்டும். குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ. 7,850 வழங்க வேண்டும்.

சத்துணவு அமைப்பாளர்களுக்கு 10 லட்சமும், உதவியாளர்களுக்கு 5 லட்சமும் பணிக்கொடை நிதி வழங்க வேண்டும். குடும்ப ஓய்வூதியம் குறைந்த பட்சம் 9 ஆயிரம் ரூபாயாக வழங்க வேண்டும் உள்ளிட்ட 5 அம்ச கோரிக்கைகளான 43 ஆண்டு சத்துணவு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வழங்குவதாக கூறிய திமுக தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற கோரி 300 க்கும் மேற்பட்ட சத்துணவு ஊழியர்கள் கண்டன கோஷங்கள் எழுப்பி காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் திடிரென சாலை மறியலில் ஈடுபட்டு ஆர்பாட்டம் செய்தனர்.

சாலை மறியலில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்தனர்.

சாலை மறியலால் சேலம் தருமபுரி சாலையில் சுமார் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் மாவட்ட செயலாளர் மகேஸ்வரி, பொருளாளர் வளர்மதி, மாநில செயற்குழு உறுப்பினர் ஜெயா உள்ளிட்ட 300 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து சத்துணவு ஊழியர்கள் கவனஈர்ப்பு போராட்டம் , காத்திருப்பு போராட்டம், காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம், மறியல் போராட்டம் என பல்வேறு வகையில் போராடி வந்தாலும் திமுக அரசு தேர்தலில் வழங்கிய வாக்குறுதி வெறும் ஓட்டுக்காக மட்டும் தான் என்பது போல் பாரா முகமாக இருந்து வருவதால் அரசு ஊழியர்களின் போராட்டம் உக்கிரமடைந்து வருகிறது.



### வீட்டுமனை பட்டா கேட்டு

## வட்டாட்சியர் அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகை!

### தாராபுரத்தில் பரபரப்பு!!

தாராபுரம்,ஜன.22


தாராபுரம் அருகே உள்ள நந்தவனம் பாளையம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட காசிலிங்கம் பாளையம் கிராமம், நாவிதன்புதூரில் வசித்து வரும் அருந்ததியர் சமூக மக்கள் வீட்டுமனை பட்டா வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர் இந்த குடும்பங்கள், தங்களுக்கு சொந்தமான வீட்டு மனை வழங்கக்கோரி மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அதிகாரிகளிடம் தொடர்ந்து மனுக்கள் அளித்தும் இதுவரை எந்த தீர்வும் கிடைக்காத நிலையில் உள்ளதாக கூறப்படுகிறது.

அரசு பதிவுகளின்படி நாவிதன்புதூரில் உள்ள நத்தம் புறம்போக்கு நிலம் குடியிருப்பு பயன்பாட்டிற்கு ஏற்றதாக இருந்தும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காமல் அலட்சியம் காட்டி வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த நிலையில், நாவிதன்புதூரில் உள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில் உடனடியாக வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் என வலியுறுத்தி, ஆதித்தமிழர் முன்னேற்ற கழகம் சார்பில் மாவட்ட செயலாளர் காளிமுத்து தலைமையில், பொறுப்பாளர் பூக்கடை ராமர் முன்னிலையில், நாவிதன்புதூர் ஊர் பொதுமக்கள் இணைந்து தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### திம்பம் மலைப்பாதையில்

## பிக்கப் வாகனம் கவிழ்ந்து விபத்து!



சத்தியமங்கலம் ஜன. 22

சத்தியமங்கலம் அடுத்த திம்பம் மலைப்பாதை தமிழகம்கர்நாடகாவை இணைக்கும் மிக முக்கிய போக்குவரத்து பகுதியாக இருந்து வருகிறது. 27 கொண்டை ஊசி வளைவுகளை கொண்டது. திம்பம் மலைப்பாதையில் தினசரி சுமார் 1500 க்கும் மேற்பட்ட வாகனங்கள் சென்று வருகின்றன.

இந்நிலையில் நேற்று மாலை சத்தியமங்கலம் அடுத்த திம்பம் மலைப்பாதையில் பப்பாளி பழம் ஏற்றிச்சென்ற பிக்கப் சரக்கு வாகனம் 14 வது கொண்டை ஊசி வளைவில் திரும்பும் போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. தாளவாடியில் இருந்து கேரளா நோக்கிச் சென்ற சரக்கு வாகனம் கவிழ்ந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக ஓட்டுநர் ராஜா என்பவர் சிறிய காயங்களுடன் உயிர்த்தப்பினார்.

இவ்விபத்தால் திம்பம் மலைப்பாதையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவல்றிந்த ஆசனூர் காவல் துறையினர் சம்பவம் இடத்திற்குச் சென்று போக்குவரத்தை சீர் செய்து வாகனத்தை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

### சோலார் புதிய பேருந்து நிலையத்துக்கு

## சுற்றுலாப் பேருந்துகள் இயக்கக் கோரிக்கை!

ஈரோடு,ஜன.22

ஈரோடு மாநகர், சோலார்புதிய பேருந்து நிலையத்தில் இருந்து வெள்ளக்கோவில், கரூர், மதுரை, திருச்சி, நாகர்கோவில், ராமேசுவரம், சிவகங்கை உள்ளிட்ட பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

சோலார் பேருந்து நிலையத்துக்கு பயணிகள் செல்லும் வகையில் ஈரோடு பேருந்து நிலையத்தில் இருந்து நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் ஈரோடு அரசு மருத்துவமனை, சூரம்பட்டி நான்குமுனை சாலை சந்திப்பு, ரயில் நிலையம், கொல்லம்பாளையம் வழியாக சென்று வருகின்றன.

அதேசமயம் சூளை, சித்தோடு, சம்பத் நகர், நசியனூர், மேட்டுக்கடை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து சோலார் பேருந்து நிலையத்துக்கு வர வேண்டிய பயணிகள், இரண்டு பேருந்துகள் மாற வேண்டிய நிலை உள்ளதால் சிரமத்துக்கு ஆளாகின்றனர். எனவே, ஈரோட்டின் முக்கியப் பகுதிகளை இணைக்கும் வகையில் சுற்றுப் பேருந்துகள் இயக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து கோபியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் அ.நே.ஆசைத்தம்பி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அண்மையில் அளித்த மனு: ஈரோடு மாநகர் பகுதியில் ரயில் நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கல்வி மற்றும் நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளன. மாநகர் பகுதியில் இருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் சோலார் புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ளது.ஈரோடு பேருந்து நிலையத்தில் இருந்து மட்டுமே சோலார் புதிய பேருந்து நிலையத்துக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பயணிகளின் வசதிக்காக ஈரோட்டில் சுற்றுப்பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.அதன்படி, ஈரோடு பேருந்து நிலையம், சோலார் பேருந்து நிலையம், புதிதாக அமைய உள்ள கனிராவுத்தர் குளம் பேருந்து நிலையம் ஆகியவற்றை இணைக்கும் வகையில் சுற்றுப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். சி1 என்ற பெயரில் ஈரோடு பேருந்து நிலையத்தில் இருந்து சவிதா சிக்னல், பன்னீர் செல்வம் பூங்கா, காளை மாடு சிலை, சோலார் பேருந்து நிலையம் சென்று, அங்கு இருந்து மீண்டும் காளை மாடு சிலை, ரயில் நிலையம், அரசு மருத்துவமனை, பெருந்துறை சாலை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திண்டல், மேட்டுக்கடை, நசியனூர், சித்தோடு, சூளை, வீரப்பன்சத்திரம் வழியாக மீண்டும் பேருந்து நிலையத்துக்கு வந்து சேர வேண்டும்.

இதேபோல சி2 என்ற பெயரில் மறுமார்க்கமாக ஈரோடு பேருந்து நிலையத்தில் இருந்து வீரப்பன்சத்திரம், சூளை, சித்தோடு, நசியனூர், மேட்டுக்கடை, திண்டல், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரசு மருத்துவமனை, ரயில் நிலையம், காளைமாடு சிலை, சோலார் பேருந்து நிலையம் சென்று, இதே மார்க்கத்தில் மீண்டும் ஈரோடு பேருந்து நிலையத்துக்கு வந்து சேர வேண்டும்.

கோவை, மதுரை, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ளதைபோல ஈரோட்டிலும் சுற்றுப் பேருந்துகள் இயக்கப்பட்டால் பல்வேறு பகுதிகளில் இருந்து பயணிகள் நேரடியாக சோலார் பேருந்து நிலையத்துக்கு செல்வதற்கு எளிதாக இருக்கும். இந்தப் பேருந்துகளை 15 நிமிடங்கள் இடைவெளி



## சுதந்திரப் போராட்ட வீரர் தில்லானுக்கு நினைவுச்சின்னம்!

### ஈரோடு கலெக்டரிடம் வாரிசுதாரர்கள் மனு!!

ஈரோடு,ஜன.22

கி.பி 1755 முதல் 1805 வரை ஆங்கிலேயர்களுக்கு எதிராக தீரன் சின்னமலை அனைத்து சமுதாய இளைஞர்களையும் திரட்டிப் போரிட்டபோது, அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மாவீரன் பொல்லான் மற்றும் தளபதி தில்லான் ஆகியோர் ஆற்றிய பங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

கள்ளிக்கோட்டையில் இருந்து ஆங்கிலேயரின் ரகசியத் தகவல்களை மாறுவேடத்தில் கொண்டு வரும் மாவீரன் பொல்லான், அதனைத் தனது மாமனான தளபதி தில்லானிடம் ஒப்படைத்து தீரன் சின்னமலைக்குச் சேர்ப்பது வழக்கம்.

குறிப்பாக, 1804ஆம் ஆண்டு நடைபெற்ற ஓடாநிலை போரில் (தடிவரசு போர்), தில்லான் தனது தடிவரசு படையைக் கொண்டு ஆங்கிலேயரைத் திணறடித்தார்.

பின்னர் 1805ஆம் ஆண்டு ஆடி மாதம் 1ஆம் தேதி, மாவீரன் பொல்லான், தளபதி தில்லான் மற்றும் சுபேதார் வேலப்ப கவுண்டர் ஆகியோரை ஆங்கிலேயர்கள் அரச்சலூர் நல்லமங்காபாளையம் நத்தக்காட்டில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு, தோலை உரித்துச் சுட்டுக் கொன்றனர் என்பது வீரவரலாறாகும். தீரன் சின்னமலை மற்றும் மாவீரன் பொல்லான் வரலாற்று நூல்களில் தில்லானின் வீர வரலாறு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், சுதந்திரப் போராட்ட வீரர் தளபதி தில்லானுக்கு நினைவுச் சின்னம் அமைக்க வலியுறுத்தி, சமூக நீதி மக்கள் கட்சி மற்றும் மாவீரன் பொல்லான் பேரவை நிறுவனத் தலைவர் வடிவேல்ராமன் தலைமையில், தில்லானின் வம்சாவளியினர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

இந்நிகழ்வில் மாநில அமைப்புச் செயலாளர் தென்றல்நாகராஜ், மாவட்ட அமைப்புச் செயலாளர் சதீஷ் பாபு, நிர்வாகிகள் மாணிக்கசுந்தரம், சண்முகம், வாரிசுதாரர்கள் ஆர்.சசிகுமார், என். கே.துரைசாமி, எம்.குமரேசன், வி.குருசாமி, க.மூர்த்தி மற்றும் பெண் வாரிசுதாரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




### ஜன.27—ல் ஊழியர்கள் வேலை நிறுத்தம்:

## வங்கிகளுக்கு தொடர்ச்சியாக 4 நாட்கள் விடுமுறை வரும்!

சென்னை, ஜன.2

வேலை நிறுத்த அறிவிப்பு எதிரொலியாக 4 நாட்கள் வங்கிகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்தில் புத்தாண்டு கொண்டாட்டங்கள், பொங்கல் திருநாள், சங்கராந்தி, குடியரசு தினம் என்று அதிக நாட்கள் வங்கிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நாடு முழுவதும் வங்கி ஊழியர்கள் கூட்டமைப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட போவதாக அறிவித்துள்ளனர்.

வங்கிகளில் வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே வேலை என்ற கோரிக்கையை வலியுறுத்தி, நாடு முழுவதும் வரும் ஜனவரி 27–ஆம் தேதி ஒருங்கிணைந்த வங்கி ஊழியர்கள் கூட்டமைப்பு வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளது.

இதனால் ஏற்கனவே உள்ள தொடர் விடுமுறையுடன் சேர்த்து வங்கிகள் மூடப்பட்டிருக்கும். ஜனவரி 24ம் தேதி சனிக்கிழமை வங்கிகளுக்கு வழக்கமான விடுமுறை தினம். எனவே அடுத்த தினமான ஜனவரி 25 ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்தோடு, ஜனவரி 26ம் தேதி குடியரசு தினம் என்பதால் அன்றைய தினமும் விடுமுறையாக அமைந்துள்ளது.

இந்நிலையில், ஜனவரி 27ம் தேதி வங்கி ஊழியர்கள் ஸ்டிரைக் காரணமாக அன்றும் வங்கிகள் செயல்படாது. எனவே ஜனவரி 24ம் தேதி முதல் ஜனவரி 27 வரை தொடர்ந்துவங்கிகள்4தினங்களுக்குமூடப்பட்டிருக்கும்.

## கொச்சி–முசிரிஸ் பினாலே கேரளாவில் கலாச்சாரத்தையும் சுற்றுலாவையும் வலுப்படுத்துகிறது!



சென்னை, ஜன.22

இந்தியாவின் முன்னணி கலாச்சார நிகழ்வுகளில் ஒன்றான கொச்சி–முசிரிஸ் பினாலே, கலை, வரலாறு மற்றும் சுற்றுலாவை இணைத்து பார்வையாளர்களுக்கு மூழ்கிய கலாச்சார அனுபவத்தை வழங்குகிறது. மார்ச் 31 வரை நடைபெறும் இந்த பினாலே, உலகம் முழுவதிலிருந்தும் வந்த முன்னணி கலை வெளிப்பாடுகள் கொச்சி நகரின் பாரம்பரிய இடங்களில் காட்சியிடுகிறது, கொச்சியை உலகளாவிய கலாச்சார இலக்காக வலுப்படுத்துகிறது.வரும் கோடை விடுமுறை பருவத்தில் பயணிகளை ஈர்க்க, கேரளா சுற்றுலாத்துறை நாட்டின் முக்கிய நகரங்களில் தொடர்ச்சியான ரோட் ஷோக்களை நடத்தவுள்ளது. ஜனவரி 20ஆம் தேதி சென்னை மற்றும் 22ஆம் தேதி பெங்களூரில் தொடங்கி, ஹைதராபாத், கொல்கத்தா, லக்னோ மற்றும் இந்தூரில் B2B சந்திப்புகள் நடைபெறும். இதில் புதிய தயாரிப்புகள், அனுபவமிக்க சுற்றுலா மற்றும் உள்ளூர் இலக்குகளை பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கம் உள்ளது. கேரளா சுற்றுலா மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள், 'நிஷாகந்தி நடன விழா', முசிரிஸ் ஹெரிடேஜ் பாதைகள், ஆயுர்வேத நலன் அனுபவங்கள் மற்றும் சாகச செயல்பாடுகள் ஆகியவை அடங்கும். சுற்றுலா அமைச்சர் திரு பி.ஏ. முகமது ரியாஸ் தெரிவித்ததாவது, "இந்தியாவும் உலகமும் பாராட்டும் வகையில், கேரளா பயணிகளை ஈர்க்கும் பல்வேறு அனுபவங்கள் மற்றும் பாரம்பரிய வளங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. வருகிற கோடை விடுமுறை பருவமும் பயணிகள் வருகை அதிகரிக்கும்."

## பிளிப்கார்ட் தனது சந்தை நிர்வாக கட்டமைப்பை வலுப்படுத்துகிறது!



சென்னை, ஜன.22

நம்பிக்கை, பொறுப்புக்கூறல் மற்றும் தளத்தின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய பிளிப்கார்ட் தனது சந்தை நிர்வாகக் கட்டமைப்பு முதலீடு செய்து, அதை வலுப்படுத்தி வருகிறது. புதிய தொழில்நுட்பங்கள், கட்டமைக்கப்பட்ட மனித மேற்பார்வை மற்றும் முறையான இணக்கக் கொள்கைகளை இணைத்து, பிளிப்கார்ட் நம்பகமான சூழலை பராமரிக்கிறது. இதன் மூலம் உண்மையான வணிகங்கள் செழிக்க உதவுவது, வாடிக்கையாளர்கள் பாதுகாப்பான, தரமான பாராட்டுகளைப் பெறுகிறார்கள். பிளிப்கார்ட், அபாய அடிப்படையில் புதிய விற்பனையாளர் சரிபார்ப்பு, ஜிஎஸ்டி, பான், சாதனம், முகவரி ஆகியவற்றைசோதிக்கும்முறையும்,மோசடிஇணைப்பு பகுப்பாய்வு ஆகியவற்றை முன்னிட்டு, விதிமீறிய விற்பனையாளர்கள் தளத்தில் நடமாடாத வகையில் தடுப்புகள் செய்கிறது. நிகழ்நேர கண்காணிப்பு, கைமுறை ஆய்வுகள், ஜியோடேக் முகவரி சரிபார்ப்பு மற்றும் சற்றுமுன் திடீர் ஆய்வுகள் ஆகியவை சேர்ந்து வணிக சூழலை பாதுகாக்கின்றன. பிளிப்கார்ட் நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் மற்றும் சந்தைப் பிரிவின் தலைவர் சாகேத் சௌத்ரி கூறியதாவது, "நம்பகமான மற்றும் இணக்கமான சந்தையை வளர்ப்பது பிளிப்கார்ட்டின் அடிப்படை நோக்கம். தொழில்நுட்ப ஆதாரமான அபாயக் கண்டறிதல் மற்றும் நிகழ்நேர கண்காணிப்பின் மூலம், உண்மையானவிற்பனையாளர்களுக்கு தடைகளை நீக்கி, வாடிக்கையாளர்கள் எப்போதும் பாதுகாப்பான, தரமான பாராட்டுகளைப் பெறுவதை உறுதி செய்கிறது."

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

## ஆற்றுத்திருவிழாவில் துயரம்:

# சிலிண்டர் வெடித்து பெண் பலி; 10-க்கும் மேற்பட்டோர் படுகாயம்!



திருக்கோவிலூர், ஜன.22

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை முடிவடைந்த 5வது நாளில் கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் உள்ள தென் பெண்ணையாற்றங்கரையில் ஆண்டுதோறும் ஆற்றுத்திருவிழா கோலாகலமாக கொண்டாடப்படுவது வழக்கம். இதில் அந்தந்த பகுதி களில் உள்ள கோவில்களில் உள்ள உற்சவமூர்த்திகள் தென்பெண்ணை யாற்றங்கரைக்கு எடுத்து வரப்பட்டு தீர்த்தவாரி உற்சவம் நடைபெறும்.

அந்த வகையில் இந்தாண்டுக்கான ஆற்றுத்திருவிழா நேற்று நடை பெற்றது. இதில் கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோ விலூர் அருகே உள்ள மணலூர்பேட்டை தென்பெண்ணையாற்றில் ஆற்றுத்திருவிழா கோலாகலமாக தொடங்கி நடைபெற்று வந்தது. இந்த விழாவில் திரு வண்ணா மலை அருணாசலேஸ்வரர் உள்ளிட்ட பல்வேறு சாமிகளுக்கு தீர்த்தவாரி நடைபெற்றது. ஆற்றுத்திருவிழாவிற்கு வந்த சாமிகளை தரி சனம் செய்வதற்காக கள்ளக்குறிச்சி மட்டுமின்றி அருகில் உள்ள திரு வண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக் கான பக்தர்கள் வருகை தந்தனர்.

இதையொட்டி சிறுவர்கள் விளையாடி மகிழ்வதற்காக ஆங்காங்கே ராட்டினம் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களும், தின்பண்ட ங்கள், பொம்மை போன்ற கடைகளும் அமைக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் மணலூர்பேட்டை ஆஞ்சநேயர் கோவில் அருகே வியாபாரி ஒருவர், ஹீலியம் கியாஸ் சிலிண்டர் மூலம் பலூனில் காற்று நிரப்பும் கடை அமைத்து பலூன் வியாபாரம் செய்து வந்தார்.

இந்த நிலையில் இரவு 7 மணி அளவில் 2 ஹீலியம் கியாஸ் சிலிண் டர்களில் ஒரு கியாஸ் சிலிண்டர் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இந்த சத்தம் கேட்டு அங்கிருந்தவர்கள் நாலாபுற மும் சிதறி ஓடினர். இதனால் அந்த பகுதியே போர்க்களம் போல் காட்சி அளித்தது. இந்த கியாஸ் சிலிண்டர் வெடித்த விபத்தில் திருவண்ணாமலை மாவட்டம் பாவுபட்டு கிராமத்தை சேர்ந்த பரமசி வம் மனைவி கலா (வயது 50) என்ற பெண் சிக்கி உடல் சிதறி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் மணலூர்பேட்டை பள்ளி ச்சந்தையை சேர்ந்த கோவிந்தசாமி மனைவி தமிழ்செல்வி (57), வேலையாப்பாக்கத்தை சேர்ந்த செல்வம் மனைவி இந்திராணி (47) மற்றும் பலூன் வியாபாரி யான திருவண்ணாமலை அருகே குளத்தூரை சேர்ந்த அய்யனார்மகன் ஏழுமலை (40) உள்பட 10க்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்தனர். அதில் சிலருக்கு கை, கால்கள் துண்டாகி சாலையில் விழுந்தன. அவர்கள் அபாய குரல் எழுப்பியது காண்போர் நெஞ்சை பதை, பதைக்க செய்தது.இதையடுத்து பலத்த காயமடைந்த வர்களை போலீசார் மீட்டு சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 2 பேரின் உடல்நிலை மிக வும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக கூறப்படு கிறது.

6 பேர் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.இதற்கிடையே விபத்து நடந்த பகுதி போலீஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு தீவிர சோதனை மேற்கொள் ளப்பட்டு வருகிறது. விபத்தில் காயமடைந்தவர்கள் விவரம்:

திருக்கோவிலூர் அருகே மணலூர்பேட்டையில் பலூன் கியாஸ் சிலிண்டர் வெடித்து விபத்து ஏற்பட்டதில், காயமடைந்தவர்கள் விவ ரம் வெளியாகி உள்ளது. இதன் விவரம் வருமாறு: கிளியனூர் கிராமத் தைச் சேர்ந்த ரோஹித் குமார் (வயது 9), யுவஸ்ரீ (11), திருவண்ணாமலை மாவட்டம் தலையாம்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த அனுஷ்கா (17), ரம்யா (17), முகிலன் (23), லோகேஷ் (17), யஸ்வந்த் (20), பாவுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த மாதேஷ் (11), வேளையாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த இந்திரா (50), மணலூர்பேட்டையைச் சேர்ந்த ரிஷி (20), பழை யனூர் கிராமத்தைச் சேர்ந்த சினேகா (18), பள்ளி சந்தல் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வி (57), மாதேஷ் (11), பலூன் வியாபாரி கீழ் பெண் ணாத்தூர் குளத்தூரை சேர்ந்த ஏழுமலை (40) ஆகியோர் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் சிகிச் சைக்காக சேர்க்கப்பட்டனர். இதில் மாதேஷ் (11) மேல்சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.



சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குள்ளவீரன்பட்டி பகுதியில், மேட்டூர் அணைக்கு செல்லும் சாலை ஓரத்தில், சிறு கடைகளை அமைத்து தொழில் நடத்தி வந்துள்ளனர். இந்நிலையில் கடந்த வாரம் மேட்டூர் நகராட்சி சார்பில் சாலையோரம் இருந்த கடைகளை அகற்றியதாக அப்பகுதி மக்கள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் சதாசிவத்திடம் முறையிட்டதின் பேரில், சம்பவ இடத்திற்குச் சென்ற எம்எல்ஏ சதாசிவம், கடைகள் அமைக்கப்பட்டிருந்த இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மேட்டூர் நகராட்சி அதிகாரிகளிடம் பேசிய அவர், சிறு கடைகளை வைத்து தங்கள் வாழ்வாதாரத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கும் அவர்களின் கடைகளை இருந்த இடத்திலேயே நடத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதனைத்தொடர்ந்துஎம்எல்ஏவின்கோரிக்கையைஏற்றநகராட்சிநிர்வாகம்பொதுமக்களுக்கு மீண்டும் அங்கேயே கடைகளை விற்பதற்கு அனுமதி வழங்கியது. இதை அடுத்து தங்களது கோரிக்கையை நிறைவேற்றிய எம்எல்ஏ சதாசிவத்திற்கு, குள்ளவீரன்பட்டி வியாபார மக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



சிவகங்கை மாவட்டம், கண்டுபட்டியில் நடந்த மஞ்சுவிரட்டு போட்டியில் காளையை அடக்க முயலும் வீரர்களை படத்தில் காணலாம்.

## தளி வாய்க்காலை தூர்வார கோரிக்கை!

உடுமலை,ஜன.22

உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி அணையில் இருந்து தளி வாய்க்கால் செல்கிறது. இந்த வாய்க்கால் மூலம் எட்டு குளம் பாசனத் தில் சுமார் 3100 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த வாய்க்கால் கரைகள் பெயர்ந்து சிதலமடைந்து காணப் படுகிறது.

செடி கொடிகள் வளர்ந்து புதர் மண்டி காணப்படுகிறது.

தரைப்பகுதியும் சேத மடைந்து காணப்படுகி றது. இதனால் அணை யில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் சரிவர கடைமடை பகு திக்கு செல்வதில்லை ,எனவே தளி வாய்க் காலை தூர்வாரி கரை களை பலப்படுத்த வேண்டும் வாய்க் காலை முழுமையாக சீர மைக்க வேண்டும் என விவசாயிகள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்

# மெட்ரோ ரெயிலுக்கு நிதி ஒதுக்காமல் தமிழகத்தை மத்திய அரசு வஞ்சிக்கிறது!

### மாநில அரசு குற்றச்சாட்டு!!

சென்னை, ஜன.22

மெட்ரோ ரெயில் விவகாரம் தொடர் பாக ஆளுநர் உரையில் குறிப்பி டப்பட் டுள்ளதாவது:–

பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கு இடையே, ஒன்றிய அரசு உறுதியளித்த படி, உரிய நேரத்தில் தனது பங்கை விடு விக்கும் என எதிர்பார்த்து, சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் தடைபடாமல் நடைபெ றுவதற்காக, மாநில அரசே தனது சொந்த நிதியிலிருந்து திட்டத்திற்குத் தேவை யான நிதியை உரிய நேரத்தில் முன்னதாக விடுவித்து வந்தது. ஆனால், ஒன்றிய அரசு தனது பங்கினை விடுவிப்பதில் ஏற் பட்ட காலதாமதத்தால், கடந்த இரண் டாண்டுகளாக மாநிலத்தில் மற்ற பணிக ளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் பாதிப்பு ஏற்பட்டது. முதலமைச்சரின் தொடர் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒன் றிய அரசு சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு 50:50 என்ற விகிதத்தில் பங்கு மூலதன உதவி வழங்க ஒப்புதல் அளித்தது. இந்நிலை யில், இத்திட்டத்திற்கான நிதியினை உரிய நேரத்தில் ஒன்றிய அரசு விடுவிக்கும் எனில், இத்திட்டப் பணிகள் திட்ட காலக் கெடுவிற்கு முன்னதாகவே முடிக்கப்படும்.

தற்போது, சென்னைக்கு அடுத்தபடி யாக அதிவேகமாக வளர்ந்து வரும் இரண் டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ ரெயில் திட்டத்தின் தேவையை உணர்ந்து, அங்கு மெட்ரோ ரெயில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என இந்த அரசு முடிவு செய்தது. அதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஒன் றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக் கப்பட்டன. எனினும், இந்தத் திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்காமல், அவற்றை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பி யுள்ளது வருத்தமளிக்கிறது. கோயம்புத் தூர் மற்றும் மதுரை மாநகரங்களில் 20 லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையே உள்ளதால், இத்திட்ட அறிக் கைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட வில்லை என ஒன்றிய அரசு விளக்கம் அளித்துள்ளது. தகுதியின் அடிப்படை யில் மற்ற மாநிலங்களில் அனுமதிக்கப் பட்ட நகரங்களுடன் ஒப்பிடும்போது, அவற்றை விடப் பெரிய நகரங்களான கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரெயில் திட்டங்களை நிராகரித்திருப்பதன் மூலம், மெட்ரோ ரெயில் திட்டத்தி லும் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் அணுகும் நிலையே காணப்படுகிறது.

இவ்வாறு உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி!

திருப்பூர்,ஜன.22

திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் சாலை பாது காப்பு மாதம் 2026 முன்னிட்டு, அவிநாசி போக்கு வரத்து காவல்துறை மற்றும் யங் இந்தியன்ஸ் அமைப்பு இணைந்து, தனியார் கல்லூரி மாணவி கள் பங்கேற்ற சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நாடகம் மற்றும் பேரணி அவிநாசி புதிய பஸ் நிலையத்தில் நடைபெற்றது.

சாலை பாதுகாப்புவிழிப்புணர்வு நிகழ்ச்சியை கூடுதல் துணை காவல் கண்காணிப்பாளர் ராஜேந் திரன் அவிநாசி போக்குவரத்து ஆய்வாளர் வனிதா ஆகியோர் தலைமையேற்று துவக்கி வைத்தனர்.

இந்த சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நாடகத் தில் ஹெல்மெட் அணியாமல் பயணம் செய்து விபத்து மற்றும் போக்குவரத்து விதிகளை பின்பற் றாமல் அதிவேகத்தால் ஏற்படும் விபத்து அதனால் ஏற்படும் உயிரிழப்பு, உயிரிழந்தவரின் குடும்பத்தினரின் வேதனை, என்பதனை கல்லூரி மாணவிகள் மைம் நாடகத்தின் மூலம் பொதுமக் கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடித்துக் காண்பித்தனர்.

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுநிகழ்ச்சியில் அவிநாசி போக்குவரத்து உதவி ஆய்வாளர் லோக நாதன், தனியார் கல்லூரி பேராசிரியர்கள், மற்றும் யங் இந்தியன்ஸ் அமைப்பு நிர்வாகிகள் உள்ளிட் டோர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு கல்லூரி மாணவிகள் பங்கேற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நாடகம் மற்றும் பேரணி அவிநாசி போக்குவரத்து காவல்துறை சார்பில் நடைபெற்றது.

## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் மாடு முட்டியதில் முதியவர் பலி!

### வேடிக்கை பார்த்தபோது சம்பவம்!!

அலங்காநல்லூர், ஜன, 22

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அய்யூர் பகுதியைச் சேர்ந்தவர் சேகர் (68). இவர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அலங்காநல்லூரில் நடை பெற்ற ஜல்லிக்கட்டு போட்டியை பார்ப்பதற்கு பார் வையாளராக வந்திருந்தார்.

இந்நிலையில் கேட்டுக்கடை பகுதியில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது மாடு முட்டியதில் தலையில் காயம் ஏற்பட்டது. உடனடி யாக அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர்.அங்கு சிகிச்சையில் இருந்தவர் இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## மகனுக்கு தொடர்ந்து எதிர்ப்பு:

# தி.மு.க. பக்கம் சாய்கிறார் ராமதாஸ்!

சென்னை, ஜன.22

டாக்டர் ராமதாஸ் தி.மு.க. பக்கம் சாய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகசட்டசபை தேர்தல் நெருங்கி வருவதால் விரைவில் கூட்டணியை இறுதி செய்ய அ.தி.மு.க. – பா.ஜ.க. ஆகிய இரு கட் சிகளும் முனைப்பு காட்டி வருகின்றன.



பிரதமர் நரேந்திர மோடி 23–ஆம் தேதி தமிழகம் வருகிறார். அதற்கு முன்ன தாக கூட்டணி இறுதி செய் யப்பட உள்ளது.

பாராளுமன்றத் தேர்த லின் போது பா.ஜ.க. அணியில் பா.ம.க. இடம் பெற்றது. அதன் பிறகு அக்கட்சியில் பிளவு ஏற்பட்டது. அதனால் எந்த அணியில் பா.ம.க. இடம்பெறும் என்ற கேள்வி எழுந்தது.

இப்படிப்பட்ட நிலையில் அ. தி.மு.க. பொதுச் செயலாளர் எடப் பாடி பழனிசாமியை திடீரென அன்பு மணி சந்தித்து கூட்டணியை உறுதி செய்து கொண்டார்.அதனால் ராம தாஸ் விரக்தி யடைந்தார். தனது தலை மையிலான கட்சிதான் உண்மையான பா.ம.க. என்றும், ஆகவே கூட்டணி தொடர்பாக முடிவெடுக்க தனக்கே அதிகாரம் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இது ஒருபுறம் இருக்க ராமதாசை சமாதானப்படுத்தி இணைய வைத்து விடலாம் என பா.ஜ.க. மேலிடத் தலைவர்கள் எண்ணினர். ஆனால் அது நிறைவேறாது என்று கூறப்படு கிறது.ஏனென்றால் அன்புமணிக்கு எதிரான நிலையில் ராமதாஸ் உறுதி யாக உள்ளார். நேற்று கூட உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.

ஆகவே அவர் தி.மு.க. அணியில் சாய்வார் என் பது உறுதியாக தெரியவந் துள்ளது.

தி.மு.க. கூட்டணியில் ஏற்கனவே விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உள் ளது. ராமதாஸ் வருவதை திருமாவளவன் விரும்பவில்லை என்று சமீபத்தில் செய்தி வெளி யானது. ஆகவே அவரை சமாதானப்படுத்தும் முயற்சியில் தி. மு.க.வினரும், பா.ம.க. தலைவர்க ளும் ஈடுபட்டு இருப்பதாக இப் போது செய்தி வெளியாகி உள் ளது.2011–ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலின் போது பா.ம.க.வும், விடு தலைச் சிறுத்தை களும் தி.மு.க. அணியில்தான் போட்டியிட்டன. ஆனால் 2012–ஆம் ஆண்டு தருமபுரி யில் நடந்த சாதி வன்முறையைத் தொடர்ந்து இரு கட்சிகளும் உறவை முறித்தன.

அதன் பிறகு இந்த இரு கட்சிகளை யும் ஒரே அணியில் கொண்டுவர அ.தி.மு.க. முயன்றது. ஆனால் அந்த முயற்சியும் தோல்வியடைந்தது. இப்போது மீண்டும் ராமதாசை சேர்த் துக்கொள்ள தி.மு.க. விரும்புகிறது.

## வாழ்வாதாரத்தை உறுதி செய்வோம்:

# தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண கூட்டுப் பணிக் குழு!

### கவர்னர் உரையில் வலியுறுத்தல்!!

சென்னை, ஜன. 22

மீனவர்களின் விவகாரம் குறித்து கவர்னர் உரையில் குறிப்பிட்டுள்ளதா வது:–

தமிழ்நாட்டு மீனவர்க ளின் பாது காப்பிற்கு இந்த அரசு அதிக முன்னு ரிமை அளித்து வருகிறது. பாக் வளை குடாவின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடு படும் போது, வழி தவறி இலங்கை யின் கடல் எல்லைக்குள் நுழைய நேரி டும் நிகழ்வுகளில் சர்வதேச எல்லையைக் கடப்பதாகக் கூறி, இலங்கை கடற்படையினரால், தமிழ் நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படு கின்றனர். பின்னர்,

மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் நடவடிக்கைகளால் அவர்கள் விடுவி க்கப்ப ட்டாலும், இடைப்பட்ட காலத்தில் அவர்கள் சிறைவாசத்தை அனுபவிக்கும் நிலையும், மீனவர்கள் விடுவிக்க ப்பட்டாலும் அவர்களின் படகுகள் விடுவிக்கப்ப டாத நிலை யும் நிலவுவதால் அவர்களின் வாழ் வாதாரம் நீண்டகாலம் மிகவும் பாதிக் கப்படுகின்றது. இந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தை நடத்திட

கூட்டுப் பணிக் குழுவை மீண்டும் உயிர்ப்பித்திடவும், இருதரப்பும் ஏற் றுக்கொள்ளக் கூடிய நிலையான தீர்வை எட்டிடவும் ஒருங்கிணைந்த முய ற்சிகளை ஒன்றிய அரசு மேற் கொள்ள வேண்டும் என இந்த அரசு வலியுறுத்துகிறது. இவ்வாறு கவர்னர் உரையில் குறிப்பிடப்ப ட்டுள்ளது.

# ரூ.2 லட்சம் லஞ்சம் வாங்கிய குன்னூர் நகராட்சி ஆணையர், உதவியாளர் கைது!

## லஞ்ச ஒழிப்பு போலீசார் மடக்கி பிடித்தனர்!!

ஊட்டி,ஜன.22

கட்டடம் கட்ட அனுமதி வழங்க ரூ.2 லட்சம் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் குன்னூர் நகராட்சி ஆணையாளர், அலுவலக உதவியாளர் ஆகியோரை லஞ்ச ஒழிப்பு போலீஸார் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்தனர்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சி ஆணையாளராக கடந்த 2024ம் ஆண்டு முதல் இளம்பரிதி என்பவர் பொறுப் பேற்றுக்கொண்டார்.

இந்தநிலையில் சமீபத்தில் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட கோத்தகிரிக்கும் கூடுதல் பொறுப்பாக நகராட்சி ஆணையாளராக பணியாற்றி வந்தார். குன்னூர் நகராட்சி ஆணையாளராக இளம்பரிதி பொறுப் பேற்ற முதல் நகராட்சியில் கட்டட அனுமதிக்கு பெருமளவு பணம் வாங்குவதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் கோத்தகிரியில் மார்கெட் பகுதியில் இருசக்கர வாகன உதிரி பாக கடை நடத்தி வரும் ரமேஷ் என்பவர் தன்னுடைய பழைய கட்டடத்தை இடித்துவிட்டு 2500 சதுர அடியில் புதிதாக கட்டடம் கட்ட விண்ணப்பித்து டிடிசிபி அனுமதி வாங்கி இருந்தார்.

இதைத் தொடர்ந்து கோத்தகிரி நகராட்சியில் அனுமதி வாங்க நகராட்சி ஆணையாளரை தொடர்பு கொண்ட போது, அவர் அனுமதி கொடுக்க ரூ 6 லட்சம் லஞ்சம் கேட்டதாக கூறப் படுகிறது. மேலும் ஒரு லட்சம் பணத்தை குறைத்துக் கொண்டு மொத்தமாக ரூ.5 லட்சம் பணம் கொடுத்தால் வேலையை முடித்து தருவதாகவும், முதல் கட்டமாக ரூ.2 லட்சம் கொடுத்தால் கட்டட அனுமதிக்கான பணிகளை தொடங்கி விடுவதாகவும் ஆணையர் கூறியுள்ளார். ஆனால் லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத ரமேஷ் இது குறித்து லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் உத்தரவின் பேரில் ரசாயனம் தடவிய ரூ.2 லட்சம் பணத்தை ரமேஷ், குன்னூர் நகராட்சி ஆணையாளரிடம் வழங்க அவர் தங்கியுள்ள முகாம் அலுவலகத்தில் கொடுக்க வந்தார். அப்போது நகராட்சி ஆணையாளர் இளம்பரிதி உத்தரவின் பேரில் நகராட்சி உதவியாளர் விக்னேஷ் என்பவர் ரமேஷிடமிருந்து பணத்தை வாங்கி நகராட்சி ஆணையாளர் இளம் பரிதியிடம் கொடுத்தபோது இருவரையும் லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் கையும் களவுமாக பிடித்தனர். அவர்களை லஞ்ச ஒழிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர் ஜெயக்குமார், ஆய்வாளர் சண்முக வடிவு தலைமையி லான போலீஸார் வழக்குபதிவு செய்து கைது செய்தனர்.

மேலும் நகராட்சி ஆணையாளரிடம் இருந்து லஞ்ச பணத்தை பறிமுதல் செய்தனர்.



பாம்பன் ரெயில் செங்குத்து தூக்கு பாலம் 100 நாட்களுக்கு பிறகு திறக்கப்பட்டது. இந்திய கடலோர காவல் படையின் ரோந்து படகு மற்றும் கொச்சியில் இருந்து அந்தமான் செல்வதற்காக இழுவை கப்பல், ஆழ்கடல் மீன்பிடி படகுகள் பாம்பன் ரெயில் பாலத்தை கடந்து சென்றது.





# சேலம் முனீஸ்வரன் திருக்கோவிலில் சிறப்பு அபிஷேக பூஜைகள்!

சேலம்,ஜன.22

சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி மத்திய சிறை வளாகத்தில் அமைந்துள்ள, ஸ்ரீ ஸ்ரீ முனீஸ்வரன் திருக்கோவிலில் நடைபெற்று வந்த தைத்திருவிழா நேற்றுடன் நினைவு பெற்றதை முன்னிட்டு, இதனைத் தொடர்ந்து திருவிழா தொடங்கிய போது நடப்பட்ட பந்தகாலுக்கு சிறப்பு பூஜைகள் செய்து அகற்றப்பட்டது. பின்னர் ஸ்ரீ ஸ்ரீ முனீஸ்வரனுக்கு பொங்கல் வைத்து சிறப்பு அபிஷேக பூஜைகளான பால், தயிர், தேன், மஞ்சள், திருமஞ்சனம், குங்குமம், சந்தனம், இளநீர், பன்னீர், கரும்பு சாறு, ஜவ்வாது, பஞ்சாமிர்தம், நெய், உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவிய பொருட்களால் அபிஷேகம் செய்து சிறப்பு வாசனை வண்ண மலர்கள் அணிவித்து, முனீஸ்வரருக்கு மிகவும் பிடித்த சுருட்டு வைத்து பூஜை செய்யப்பட்டது. இந்த பூஜையில் 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு முனீஸ்வரனின் அருளை பெற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய சிறைத் துறை கண்காணிப்பாளர் வினோத், 140 வருடங்கள் பழமையான இந்த முனிஸ்வரன் திருக்கோவில் மிகவும் சக்தி வாய்ந்து, வேண்டியவருக்கு வேண்டியதை அருளும், இந்த முனிஸ்வரன் கோவிலில், தற்போது 141 வது ஆண்டாக நடைபெறும் தை திருவிழாவின் நிறைவு நாளான இன்று சிறப்பு பூஜைகள் செய்து, வெற்றி கரமாக திருவிழா நடைபெறுவதற்குஒத்துழைப்பு வழங்கிய சிறைத்துறை அலுவலர்கள், காவலர்கள், கோவில் நிர்வாக குழுவினர் மற்றும் திருவிழா நடைபெறுவதற்கு, முழு ஒத்துழைப்பு வழங்கிய தொழிலதிபர் டாக்டர் லயன் ரகுநாத் உள்ளிட்ட அனைவருக்கும், சேலம் சிறைத்துறை சார்பிலும் சிறைத்துறை கண்காணிப்பாளர் என்ற முறையில் தனது சார்பிலும், தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதாக, சேலம் மத்திய சிறை கண்காணிப்பாளர் வினோத் தெரிவித்தார். முன்னதாக விழா குழுவில் பங்கேற்ற அனைவருக்கும் சிறை கண்காணிப்பாளர் வினோத் சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்து நினைவு பரிசுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சிறை ஜெயிலர் ராஜேந்திரன், சோமசுந்தரம், பிரபாகரன், பூசாரி பிரகாஷ், விஸ்வநாதன், கண்ணன், அன்பு, வினோத், மணி, விக்கி, பிரவீன், உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நாட்டு துப்பாக்கியுடன் பிடிபட்ட வாலிபர்!

கோபி ஜன.22

கோபி அருகே கொங்கர்பாளையத்தில் நாட்டு துப்பாக்கிகளை பயன்படுத்தி வனவிலங்குகள் வேட் டையாடப் படுவதாக பங்க ளாப்புதூர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து கொங்கர்பா ளையம் முத்துக்கருப்பன் வீதி யைச்சேர்ந்த கருப்புசாமி (வயது 30) என்பவரின் வீட் டுக்கு சென்று போலீசார் சோதனை நடத்தினர். அப்போது கருப்புசாமி வீட்டுக் குள் ஒரு நாட்டு துப்பாக்கி பதுக்கி வைத்திருந்தது தெரிந் தது. இதையடுத்து அவரிடம் விசாரணை நடத்தியபோது அவர் நாட்டு துப்பாக்கிகளை பயன்படுத்தி வனவி லங்குகளை வேட் டையாடி யது தெரிந்தது. கடந்த 6மாதத் துக்கு முன்பு வனத்துறையி னர் ரோந்து சென்றபோது காட்டுக்குள் கிடந்த ஒரு நாட்டு துப்பாக்கியை பறிமு தல் செய்திருந் தனர். அந்த நாட்டு துப்பாக்கியும் கருப்பு சாமியுடையது தான் என்பது தெரிந்தது. இதையடுத்து போலீசார் கருப் புசாமியை கைது செய்து, அவரிடம் இருந்த நாட்டு துப்பாக்கியை பறிமுதல் செய்தனர். ஏற்கனவே கைப்பற் றப்பட்ட நாட்டு துப்பாக்கி யையும் கோபி கோர்ட்டில் போலீசார் ஒப்படைத்தனர்.

# கிருஷ்ணகிரிக்கு வருகை தரும் இளைஞரணி செயலாளர் விஜய பிரபாகரனுக்கு சிறப்பான வரவேற்க வேண்டும்!

## தேமுதிக கூட்டத்தில் தீர்மானம்!!

கிருஷ்ணகிரி ஜன 22

தேசிய முற்போக்கு திராவிட கழகம் நிறுவனத்தலைவர் கேப்டன் அவர்களின் நல்லாசியுடன் கழகப் பொதுச் செயலாளர் திருமதி.பிரேமலதாவிஜயகாந்த் அவர்களின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றியம், ஒன்றிய இளைஞரணி செயலாளர் பெரியசாமியின் குழந்தைகளுக்கு, காதணி விழாவிற்கு வருகை தரும் தேமுதிக கழக இளைஞரணி செயலாளர் விஜயபிரபாகரன் வருகை தர இருப்பது தொடர்பாக கிருஷ்ணகிரியில் ஆலோசனைக் கூட்டம் தனியார் மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.சின்னராஜ் தலைமையில் நடைபெற்றது.முன்னாள் தொண்டர் அணி செயலாளரும், தேர்தல் பணி குழு செயலாளருமான எஸ். கணேசன் அவர்களின் மறைவிற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரிக்கு வருகை தரும் கழக இளைஞரணி செயலாளருக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது குறித்தும் கொடிகள் மற்றும் நிகழ்ச்சியை சிறப்பிப்பது குறித்தும் நிர்வாகிகளிடம் ஆலோசிக்கப்பட்டது. சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.முருகன் வரவேற்புரையாற்றினார். மற்றும் மாவட்ட அவைத்தலைவர் எல்.முருகன், மாவட்ட பொருளாளர் வி.லட்சுமணன், மாவட்ட துணை செயலாளர் கே.வி. கோவிந்தராஜ், செயற்குழு உறுப்பினர் எம்.சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.கே.வேலு, தர்மலிங்கம், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.என். ராமலிங்கம், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் எம்.முருகேசன், நகர கழக செயலாளர் ஆர்.ரவி, கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வஜ்ரவேல், கிருஷ்ணகிரி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் மாதேஷ்,கேப்டன் மன்ற துணை செயலாளர் கோவிந்தராஜ், காவேரிப்பட்டினம் ஒன்றிய செயலாளர் விஜய் வல்லரசு, பர்கூர் தெற்கு ஒன்றிய செயலாளர்திருநாவுக்கரசு, பர்கூர்வடக்கு ஒன்றிய செயலாளர் சரவணன், ஊத்தங்கரை கிழக்கு ஒன்றிய செயலாளர் சதீஷ், மாவட்ட இளைஞரணி செயலாளர் பி.சி. கனகன், கிருஷ்ணகிரி ஒன்றிய அவைத் தலைவர் பார்க் கோவிந்தன், பார்க் சிவா, மேற்கு ஒன்றிய அவை தலைவர் பகுத் தன்(எ)சுரேஷ், காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் சின்னையன், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், ஊராட்சி செயலாளர்கள், மாவட்ட அணி நிர்வாகிகள், கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் நகர அவைத் தலைவர் எம்.சங்கர் நன்றியுரை கூறினார்.

# விழுப்புரம் மாவட்டத்தில் குடியரசு தினத்தன்று கிராமசபை கூட்டம்!

## கலெக்டர் தகவல்!!



விழுப்புரம்,ஜன.22

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம 26.01.2026 குடியரசு தினத்தன்று கிராமசபை கூட்டம் நடைபெறும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் நிர்வாகம் மற்றும் பொது செலவினம் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், மக்கள் திட்டமிடல் இயக்கம் மூலம் 202627 ஆம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சித் திட்டம் குறித்து விவாதித்தல், தொழிலாளர் வரவு செலவு திட்டம், தொழிலாளர் வரவு செலவு திட்டப்பணிகள் நலிவு நிலை குறைப்பு நிதி குறித்து விவாதித்தல், ஜல் ஜீவன் திட்டம், சிறு பாசன ஏரிகள் புதுபித்தல் குறித்து விவாதித்தல், தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் குறித்து விவாதித்தல், தொகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் குறித்து கிராம சபையில் வைத்து விவாதிக்கப்படவுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் 26.01.2026 அன்று கிராம சபையில் பெருமளவில் பங்கேற்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.



பாரதிய ஜனதா கட்சியின் புதிய தேசிய தலைவராக போட்டியின்றி அக்கட்சியினரால் தேர்வு செய்யப்பட்ட நிதி நபின் பொறுப்பேற்றுக் கொண்டதை கொண்டாடும் விதமாக, சேலம் மாநகர் மாவட்ட பாஜக சார்பில், சேலம் அஸ்தம்பட்டி ரவுண்டானா பகுதியில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி, தங்களது புதிய தேசிய தலைவர் தேர்வு செய்யப்பட்டதை பொதுமக்களோடு மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாஜக மாவட்ட துணை தலைவர் சுமதி ஸ்ரீ, பாஜகவின் புதிய தலைவராக நிதின்நபின் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டது, தங்களுக்கு மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதனால் தேசிய அளவில் பாஜக மேலும் வலுப்பெறும் பெறும் எனவும், இதனைத் தொடர்ந்து தங்களது தேசிய தலைவர்கள் கூறியதை போல, தமிழகத்தில் தாமரை நிச்சயம் மலர்ந்தே தீரும் என்றும், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பாரதப் பிரதமர் மோடி ஜி மற்றும் புதிய தலைவர் நிதி நபின், தேசிய ஜனநாயக கூட்டணியின் தமிழக தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் சிறப்பான கூட்டணியில்தமிழகத்தில்நிச்சயம்நல்லாட்சி மலரும், எனதெரிவித்தார். இந்தநிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் கரிகாலன், மண்டல் தலைவர் சந்தோஷ் குமார், சண்முகசுந்தரம், உள்ளிட்டநூற்றுக்குமேற்பட்டபாஜகவினர்இந்தகொண்டாட்டத்தில்கலந்துகொண்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் இது நம்ம ஆட்டம் தேதி மாற்றம் - மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல் !



தென்காசி ஜன.22

தென்காசிமாவட்டத்தில்முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா "இது நம்ம ஆட்டம்2026" 22.01.2026 (ம) 23.01.2026 ஆகிய தேதிகளில் நடைபெறவிருந்ததையடுத்து தற்போது நிர்வாக காரணங்களால் 25.01.2026 (ம) 26.01.2026 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தகவல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தென்காசி மாவட்டம் சார்பாக முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா தென்காசி மாவட்டத்திலுள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களிலும் வட்டார அளவிலான போட்டிகள் 22.01.2026 (ம) 23.01.2026 ஆகிய தேதிகளில் நடைபெறவிருந்ததையடுத்து தற்போது நிர்வாக காரணங்களுக்காக 25.01.2026 (ம) 26.01.2026 ஆகிய தேதிகளில் நடத்திட அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய அளவில்,

"இது நம்ம ஆட்டம்2026" போட்டிகள் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டத்தை சார்ந்த அனைத்து (10) ஊராட்சி ஒன்றிய அளவில் தனி நபர் மற்றும் குழுப் போட்டிகளில் முதல் இடம் பெறுபவருக்கு ரூ.3,000/மும், இரண்டாம் இடம் பெறுபவருக்கு ரூ.2,000/மும், மூன்றாம் இடம் பெறுபவருக்கு ரூ.1,000/மும் பரிசுத் தொகையும் வழங்கப்படவுள்ளது. அதன்படி தென்காசி மாவட்டத்திலுள்ள அனைத்து (10) ஊராட்சி ஒன்றியங்களிலும் 16 வயது முதல் 35 வயது வரையிலான தகுதியுடைய அனைத்து இளைஞர்களும் பங்கேற்கும் வகையில் ஒன்றிய அளவிலான போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா – "இது நம்ம ஆட்டம் 2026" போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் 16 வயது முதல் 35 வயது [01.01.1991 & 31.12.2009] வயதுடைய விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான www.sdat.tn.gov.in / www.cmyouthfestival.sdat.in வாயிலாக 06.01.2026 முதல் முன்பதிவானது தனிநபர் மற்றும் குழுப் போட்டிகளுக்கு நடைபெற்றுவருகிறது. போட்டிகள் நடைபெறும் நாளன்று வீரர், வீராங்கனைகள் ஆதார் அட்டை (அ) குடும்ப அட்டை (அ) அரசால் அங்கீகரிக்கப்பட்ட வயது சான்றிதழ்கள் கட்டாயம் சமர்ப்பிக்கப்படவேண்டும். மேலும் விபரங்களுக்கு பாட்டாக்குறிச்சி மாவட்ட விளையாட்டுஅலுவலகத்தினைநேரிலோ அல்லது 04633212580 (அ) 8838002947, 7695856826 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

# கோவை அருகே நள்ளிரவில் பயங்கரம்: குடிபோதை தகராறில் தொழிலாளி வெட்டிக் கொலை!

## வாலிபருக்கு வலை!!



பெ.நா.பாளையம்,ஜன.22

கோவை பிளிச்சி ஊராட்சி சின்னமத்த ம்பாளையம் தனியார் மதுபான பாரில் ஒன்னிபாளையம் கோகுலம் காலனியை சேர்ந்ததொழிலாளிசுரேஷ்(50) என்பவர்மது அருந்தி கொண்டு இருந்துள்ளார். அப்போது அங்கு மது அருந்திய திருமலை நாயக்கன்பாளையம் பெருமாள் கோயில் வீதியை சேர்ந்த தமிழ்ச்செல்வன்(30) என்பவருடன் போதையில் வாக்குவாதம் ஏற்பட்டு அங்கேயே போதையில் படுத்துள்ளார். மதுபான பார் ஊழியர்கள் கூடத்தை மூடுவதற்காக உள்ளே இருந்த சுரேஷை தூக்கிக் கொண்டு வந்து பார் கேட் முன்பாக வெளியில் படுக்க வைத்துள்ளனர். பின்னர் இரவு 12 மணி அளவில் மதுபான பாரில் ஏற்கனவே வாக்குவாதம் செய்த தமிழ்ச்செல்வன் அங்கு வந்து தான் வைத்திருந்த அருவாளால் சுரேஷின் வலது பக்க கழுத்து மற்றும் முகம், தாடை ஆகிய இடங்களில் வெட்டி கொலை செய்து விட்டு ஓடிவிட்டார். தகவல் தெரிந்த பெரியநாயக்கன்பாளையம் ஆய்வாளர் ராஜேஷ் கண்ணன் தலைமையில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சுரேஷ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து விசாரணை செய்து வருகிறனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், மோப்பிரிபாளையம் பேரூராட்சியில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க சிறு புகைப்படக் கண்காட்சியினை செய்திமக்கள் தொடர்புத்துறையின் மூலம் நடத்தப்பட்டதை பொதுமக்கள் பார்வையிடனர்.